**தஞ்சாவூர், செயற்பொறியாளர் (வே.பொ)(பொ) அவர்களின் செயல்முறை ஆணைகள்**

**பிறப்பிப்பவர்: திரு. H.N.கான், எம்.டெக்., எம்.பி.ஏ**

செ.மு.ஆ.எண்: ஆ/727/2019(2) நாள்: 7 .11.2019

பொருள் : பணிக்குழு – தமிழ்நாடு அமைச்சுப்பணி – திருமதி.ப.பிரியா, இளநிலை உதவியாளர் (பி.அ) - தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் மூலம் தேர்வு செய்தது – இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்து உத்தரவிடல் - தொடர்பு.

பார்வை :

1. தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம், சென்னை அவர்களின் கடித எண்.1012/PSD-G2/2019, நாள்: 20.02.2019 மற்றும் 27.02.2019
2. வேளாண்மை இயக்குநர் அலுவலக வேளாண் கூடுதல் இயக்குநர் (ப.மே) சென்னை அவர்களின் செயல்முறை ஆணை எண்.அறிபி5/139388/2019, நாள்: 05.03.2019.
3. தலைமைப் பொறியாளர் (வே.பொ), சென்னை அவர்களின் செயல்முறை ஆணை எண்.அப2/8448/2019, நாள்: 08.03.2019.
4. செயற்பொறியாளர் (வே.பொ), தஞ்சாவூர் அவர்களின் செயல்முறை ஆணை எண். ஆ/727/2019, நாள்: 14.03.2019
5. வேளாண்மை இயக்குநர், சென்னை அவர்களின் கடித எண். அறிபி3/23567/2019, நாள்: 20.07.2019

------

**ஆணைகள்:**

பார்வை (1)-ல் காணும் செயல்முறை ஆணையில் தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் மூலம் 2015-16, 2016-17 மற்றும் 2017-18 ஆண்டு முடிய நேரடித் தேர்வின் மூலம் தற்காலிகமாக தேர்வு செய்யப்பட்டு, பார்வை (2)-ல் காணும் செயல்முறை ஆணையின்படி, வேளாண்மைப் பொறியியல் துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு, பார்வை (3)-ல் காணும் செயல்முறை ஆணையின்படி, பணி நியமன ஆணை வழங்கி தஞ்சாவூர் மாவட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட திருமதி.ப.பிரியா, இளநிலை உதவியாளர் (பி.அ) அவர்கள் பார்வை (4)-ல் காணும் செயல்முறை ஆணையின்படி தஞ்சாவூர் செயற்பொறியாளர் (வே.பொ) அலுவலகத்தில் 18.03.2019 முற்பகல் முதல் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வருகிறார்.

பார்வை (5)-ல் காணும் வேளாண்மை இயக்குநர், சென்னை அவர்களின் கடிதத்தில் தெரிவித்துள்ளவாறு, இவ்வலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வரும் திருமதி.ப.பிரியா அவர்கள் பணியில் சேர்ந்த நாளான **18.03.2019 முற்பகல்** முதல் பணிவரன் முறை செய்து ஆணையிடப்படுகிறது.

..2..

Scanned with CamScanner

மேலும் இவர் மூன்றாண்டு தொடர் பணிக்காலத்தில் இரண்டாண்டு தகுதிக்காண் பருவத்தில் வைக்கப்படுகிறார்.

7/11/19

செயற்பொறியாளர் (வே.பொ)(பொ),
தஞ்சாவூர்.

பெறுநர்

திருமதி.ப.பிரியா,
இளநிலை உதவியாளர்,
இவ்வலுவலகம்.

**நகல்:** வேளாண்மை இயக்குநர், சென்னை அவர்களுக்கு பணிந்தனுப்பப்படுகிறது.

**நகல்:-** தலைமைப் பொறியாளர் (வே.பொ), சென்னை அவர்களுக்கு பணிந்தனுப்பப்படுகிறது.

**நகல்:-** கண்காணிப்புப் பொறியாளர் (வே.பொ), தஞ்சாவூர் அவர்களுக்கு பணிந்தனுப்பப்படுகிறது.

**நகல்:-** வேளாண்மை இணை இயக்குநர், தஞ்சாவூர் அவர்களுக்கு அன்புடன் அனுப்பப்படுகிறது.

**நகல்:-** இருப்புக் கோப்பு

**நகல்:-** பணிப்பதிவேடு

Scanned with CamScanner